# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | :திரு.நீலகண்டன் அ.சா.18 LW.21 |
| Father's Name | : ரவி |
| Village | : மாரியம்மன்கோவில் தெரு, பட்டனம் காலனி, |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 29 |
| Time | : 12.27 pm – 12.32 pm |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 16th day December 2021.
16.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்கிறேன். 21.1.2017ம் தேதி நான் ஊரல்பட்டனத்தில் ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஏரிக்கரையில் பிரேதம் இருந்தததை போய் பார்த்துவிட்டு வந்தேன். போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், கடந்த 21.1.2017ம் தேதியிலிருந்து சுமார் 10 நாட்களுக்கு முன்பாக சுமார் 30 வயது

மதிக்கதக்க ஆரஞ்சு சந்தனக்கலரில் ஆரஞ்சு கலரில் பூப்போட்ட அதே கலரில் பாவாடை ஜாக்கெட் மற்றும் வலது காலில் மெட்டியுடன், கவரிங்கலான தாமரை வடிவ டாலர் போட்டிருந்த ஒரு பெண் பிரேதம் அழுகிய நிலையில் எலும்பு கூடாக கிடப்பதாக என்னிடம் எடுத்து கூறி அந்த பெண் பிரேதத்தின் போட்டோ மற்றும் துண்டுபிரசுரம் வால்போஸ்ட்டரை காட்டி இதுபோன்ற உடை அணிந்த பெண் யாராவது உங்கள் ஊரில் காணாமல் போய் இருந்தாரா என்று போலீஸ் என்னிடம் விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை - இல்லை.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | :திரு.தனசேகர் | அ.சா.19 LW.31 |
| Father's Name | : மணி | |
| Village | : விநாயகபுரம் | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 40 | |
| Time | : 12.32 pm – 12.41 pm | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 16th day December 2021.
16.12.2021

முதல் விசாரணை.

நான் கிராம உதவியாளராக பணிபுரிந்த இடம் பட்டனம் கிராமம், திண்டிவனம் தாலுக்கா. 2017ம் வருடம் காலை சுமார் 10 மணிக்கு ஏரியில் ஒரு பிரேதம் கிடப்பதாக 100 பேர் கூடிவிட்டார்கள். அங்கிருந்தவர்கள் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். பொதுமக்கள் எனக்கு போன் செய்தார்கள். நாங்கள் போவதற்கு முன்பாகவே அவர்களே போலீசுக்கும் தகவல் சொல்லிவிட்டார்கள். நாங்களும், போலீசாரும் ஒரே நேரத்தில் அங்கு வந்தோம். ஜனங்கள் ஒரு பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். முள்புதரில் ஒரு பிரேதம் கிடந்தது. பார்த்தால் தெரியாது, இருப்பினும் பார்க்கும் தூரத்தில் முள்புதரில் ஒரு பிரேதம் கிடந்தது. பிரேதத்தின் தலை சிதிலமைந்திருந்தது. அந்த பிரேதம் புடவை கட்டியிருந்த பெண் பிரேதம், புடவை இருந்தது. போலீசார் டாக்டருக்கு தகவல் சொல்லி டாக்டரும் வந்தார். டாக்டர் வந்து பிரேதத்தை பிரேத

பரிசோதனைக்காக எடுத்து சென்றுவிட்டார்கள். அடையாளம் காண்பிக்க முடியாத அளவிற்கு தலை இருந்தது. அதை பார்த்தவுடன் எனக்கு யார் என்று தெரியவில்லை. அது பெண் பிரேதம் என்று மட்டும் தெரியும். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

மேற்சொன்ன விவரங்களை தான் ஆய்வாளர் விசாரிக்கும்போது கூறினேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் விசாரிக்கும்போது சுமாராக காலை 10 மணி இருக்கும்.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.செல்வம் | அ.சா.20 | LW.32 |
| Father's Name | : அர்ச்சுனன் | | |
| Village | : திண்டிவனம் | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : 46 | | |
| Time | : 12.42 pm – 12.49 pm | | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 16th day December 2021.
16.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வெணிமணியாத்தூர் கிராம உதவியாளராக பணியாற்றினேன். தற்போதும் அங்கு தான் பணிபுரிந்து வருகிறேன். எப்பவும்போல் காலை 6 மணிக்கு பணிக்கு சென்றேன். அப்போது ஏரிக்கரையில் ஜனங்கள் இருந்தார்கள் என்று அ.சா.19 தனசேகருக்கு போன் மூலமாக செய்தி வந்தது. போன் வந்தவுடன் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொல்லிவிட்டு நாங்கள் சம்பவ இடம் போய் பார்த்தோம். வி.ஏ.ஓ பாம்பூண்டி கிராமத்திற்கு வி.ஏ.ஓ மற்றும் பட்டனம் கிராமத்திற்கு பொறுப்பு வகித்தார். அங்கு போய் பார்த்தபோது பெண் பிரேதம் கிடந்தது. டாக்டர் இருந்தார். இரண்டு போலீஸ் இருந்தார்கள். பொதுமக்கள் இருந்தார்கள். நான், வி.ஏ.ஓ மற்றும் தனசேகர் அருகில் சென்று பார்த்தோம். பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. காலில் மெட்டி இருந்தது. துணிஎல்லாம் கழண்டுபோய்

இருந்தது. அதன்பிறகு தாலுக்கா அலுவலகத்தில் ரிப்போர்ட் எழுதிக்கொடுக்கபோனோம். பிரேதத்தின் மீது ஆரஞ்சுகலர் பூப்போட்ட புடவை, அதே கலரில் ஜாக்கெட் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார். நடந்ததை சொன்னேன்.

எதிரிகள் தரபபு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரஙகளை தான் ஆய்வாளர் என்னை விசாரிக்கம்போதும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்னை விசாரிக்கும்போது பகல் 10 - 11 மணி இருக்கும். நாங்கள் போவதற்கு முன்பாகவே போலீசார் மற்றும் மருத்துவர் இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கிருந்து நாங்கள் பட்டனம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு ரிப்போர்ட் எழுதுவதற்காக வந்துவிட்டோம். தாலுக்கா அலுவலகத்திற்கு ரிப்போர்ட் கொடுப்பதற்காக வந்துவிட்டோம். நான் சொன்னதுபோல் எதையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்தது உண்மை.